DEPOSITION OF WITNESS

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No.25/2023**

அ.சா.8

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | ஜேசுதாஸ் | Caste: | |
| Father's Name: | சூசை மாணிக்கம் | Calling: | டீக்கடை தொழில் |
| Village: | சந்தைப்பேட்டை | Religion: | |
| Taluk: | கமுதி | Age: | 54 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 06.10.2025

( 1 முதல் 4 எதிரிகள் ஆஜர்.)

**முதன்மை விசாரணை**

நான் கமுதி தாலுகாவில் உள்ள சந்தைப்பேட்டையில் வசித்து டீக்கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். கே. பாப்பான்குளத்தை சேர்ந்த கருப்பணன் மகன் பூமிநாதனை தெரியாது. அதே ஊரைச் சேர்ந்த ராமுத்தேவர் மகன் முருகனை தெரியாது. எதிரிகளை தெரியாது. இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை. வழக்கு சம்பவம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது.

அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி மேற்சொன்ன சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-**

போலிஸ் விசாரணையில் கடந்த 07.08.2020ம் தேதி மாலை 6.00 மணியளவில் கே. பாப்பான்குளத்தை சேர்ந்த கருப்பணன் மகன் பூமிநாதன் என்பவர் அவர் ஊருக்கு செல்வதற்காக என் டீக்கடை முன்பாக

நடந்து போய் கொண்டிருந்தார் என்றும், அப்போது கே. பாப்பான்குளத்தை சேர்ந்த இராமு மகன் முருகன் என்பவர் அவருக்கு சொந்தமான TN 65 W 3341 என்ற TVS Star City என்ற வாகனத்தில் வந்தவர் பூமிநாதன் அருகில் பைக்கை நிப்பாட்டி வா நானும் ஊருக்கு தான் போகிறேன் என்று கூப்பிட்டார் என்றும் பூமிநாதனும் அவரது பைக்கில் ஏறி சென்றார் என்றும் பின்பு சிங்கபுலியான்பட்டி இருப்பு செம்மண்நெறிஞ்சியை சேர்ந்த குமரகுரு மகன் முத்துமணி பாப்பான்குளத்தை சேர்ந்த ராமு என்ற ராம்குமார் ஆகியோர் சேர்ந்து பழைய பிரச்சனையை மனதில் வைத்துக்கொண்டு கே பாப்பான்குளம் முத்துநாகு சமாதி அருகில் வைத்து பூமிநாதன் சாதி பெயரை சொல்லி அசிங்கமாக பேசி வெட்டி காயப்படுத்தியதாகவும், பூமிநாதன் மனைவி மேற்படி சம்பவம் குறித்து புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்ததாக கேள்விப்பட்டேன் என்றும் கடந்த 04.09.2020ம் தேதி கமுதி உட்கோட்ட காவல் துணைக் கண்காணிப்பாளர் விசாரிக்கும்போது கூறிவிட்டு தற்போது டீக்கடை வைத்திருப்பதால் தொழில் செய்வதற்கு இடைஞ்சலாக இருக்கும் என கருதி உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

இல்லை

Sd/- C.Mohanram
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM
**Spl.Sessions Case No.25/2023**

அ.சா.9

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | நாகரத்தினம் | Caste: | |
| Father's Name: | கதிரேசன் | Calling: | விவசாயம் |
| Village: | கே. பாப்பான்குளம் | Religion: | |
| Taluk: | கமுதி | Age: | 74 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 06.10.2025

( 1 முதல் 4 எதிரிகள் ஆஜர்.)

**முதன்மை விசாரணை**

நான் கமுதி தாலுகாவில் உள்ள கே. பாப்பான்குளத்தில் வசித்து விவசாய தொழில் செய்து வருகிறேன். கே. பாப்பான்குளத்தை சேர்ந்த கருப்பணன் மகன் பூமிநாதனை தெரியும். அவரது மனைவி ராக்கமாளை தெரியும். பூமிநாதன் மகன் மலைராஜை தெரியும். 4ம் எதிரி முருகனை தெரியும். மற்ற எதிரிகளை தெரியாது. அ.சா.2 பூமிநாதன் பட்டியல் இனத்தை சேர்ந்த இந்து தேவேந்திர குல வேளாளர் சமூகத்தை சார்ந்தவர். 4ம் எதிரி முருகன் சீர்மரபினர் வகுப்பை சேர்ந்த இந்து மறவர், மற்ற எதிரிகள் சாதி குறித்து எனக்கு எதுவும் தெரியாது. இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை. வழக்கு சம்பவம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது.

அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி மேற்சொன்ன சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:–**

போலிஸ் விசாரணையில் 4ம் எதிரி முருகன் குடும்பத்தாருக்கும் அ.சா.2 பூமிநாதன் குடும்பத்தாருக்கு கரண்ட் சம்பந்தமாக முன்விரோதம் இருந்து வந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அவர்கள் இரு குடும்பத்தாருக்கும் முன்விரோதம் இருந்து வந்த விவரம் எனக்கு தெரியும் என்றும் நான் இந்து மறவர் சமூகத்தை சார்ந்தவர் என்பதால் 4ம் எதிரிக்கு ஆதரவாக முன்விரோதம் இல்லை என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

இல்லை

Sd/- C.Mohanram
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED
UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM
**Spl.Sessions Case No.25/2023**

அ.சா.10

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | பழனிச்சாமி | Caste: | |
| Father's Name: | முத்து | Calling: | உதவி பொறியாளர் மின்வாரியம் |
| Village: | கணக்கனேந்தல் | Religion: | |
| Taluk: | பரமக்குடி | Age: | 43 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 06.10.2025

( 1 முதல் 4 எதிரிகள் ஆஜர்.)

**முதன்மை விசாரணை**

நான் தற்போது பரமக்குடி நகரம் மின்சார வாரியத்தில் உதவி பொறியாளராக பணிபுரிந்து வருகிறேன். 2020ம் ஆண்டில் கமுதி மின்சார வாரியத்தில் உதவி பொறியாளராக பணிபுரிந்தேன். கமுதி தாலுகா பாப்பான்குளம் கிராமம் கமுதி மின்வாரிய ஊரக தெற்கு பகுதிக்குள் அடங்கிய பகுதியாகும். மேற்படி பாப்பான்குளம் கிராமத்திற்கு பரலச்சி துணை மின் நிலையத்திற்கு மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. 07.08.2020ம் தேதி பாப்பான்குளம் கிராமத்திற்கு மின்தடை இருந்ததா என கமுதி உட்கோட்ட காவல் துணைக் கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார். நான் இல்லை என கூறினேன். காவல்துணைக் கண்காணிப்பாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க எழுத்து மூலமாக 07.08.2020ம் தேதி பாப்பான்குளம் கிராமத்திற்கு மின்தடை எதுவும் இல்லையென சான்று வழங்கினேன். நான் வழங்கிய சான்று **அ.சா.ஆ.5.** இதுசம்பந்தமாக டிஎஸ்பி என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை எந்த தேதியில் எத்தனை மணிக்கு விசாரித்தார்கள் என்றால் எனது அலுவலகத்தில் வைத்து விசாரித்தார்கள், நாள் குறிப்பிட்டு சொல்ல முடியவில்லை. நான் வழங்கிய சான்றில் எந்த தேதியில் வழங்கப்பட்டது என்பதற்கு தேதி குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான் வழங்கிய சான்றில் நாள் என குறிப்பிட்டு தேதி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 07.08.2020 ம் தேதி பாப்பான்குளம் கிராமத்தில் மின்தடை ஏற்பட்டு புகார் எதுவும் வந்ததா என்றால் இல்லை. சம்பந்தப்பட்ட கிராமத்தில் மின்தடை ஏற்பட்டாலோ மின்சார வயர் அறுந்தாலோ சம்பந்தப்பட்ட கிராமத்திற்கென உள்ள மின் ஊழியர்தான் சரிசெய்வார் என்றால் சரிதான். அன்றைய தினம் மின்தடை ஏற்பட்டு சரிசெய்ததாக மின்சார ஊழியர் எனக்கு தகவல் கொடுக்கவில்லை என்றால் சரிதான். மின்மாற்றியில் பிரச்சனை ஏற்பட்டால் தனிநபர்கள் வேலை செய்யக்கூடாது என்றால் சரிதான்.

Sd/- C.Mohanram
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)